## கர்ப்பமுற்ற பெண்களுக்கு பால்வினை நோய் தொற்று உள்ளதா என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது?



நோயின் அடிப்படையில் மருத்துவ பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை மற்றும் இரத்தப் பரிசோதனைகள் (RPR) மூலம் பால்வினை நோய் தொற்று உள்ளதா, இல்லையா? என்பதை அறிந்து கொள்ளலாம். இதற்கு அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் வசதி செய்யப்பட்டுள்ளது. பால்வினை நோய்க்கான அறிகுறிகள் சிறிது காலத்தில் தானாகவோ அல்லது சிகிச்சையின் காலம் முடியும் முன்போ மறைவதற்கு வாய்ப்புண்டு. அப்பொழுதும் முற்றிலும் குணமடைந்து விட்டோம் என்று நினைக்கக் கூடாது. ஆகையால் முழுமையான மருத்துவ சிகிச்சை பெறுதல் அவசியம். இதனை தகுதி பெற்ற மருத்துவர்கள் உறுதி செய்வார்கள்.

## இனப்பெருக்க உறுப்பு நோய்களுக்கும், பால்வினை நோய்களுக்கும் உள்ள தொடர்பு என்ன ?

பால்வினை நோய்கள் பெரும்பாலும் இனப் பெருக்க மண்டலத்தினையே பாதிக்கின்றன. பால்வினை நோய்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பாதுகாப்பற்ற உடலுறவின் மூலமாகவே பரவுகிறது. எனவே இனப்பெருக்க மண்டல நோய்கள் மற்றும் பால்வினை நோய்கள் தவிர்க்க ஒருவனுக்கு ஒருத்தி என்ற தத்துவத்தின் படி சீரிய வாழ்க்கை வாழ வேண்டும்.

**விழிப்புடன் இருப்போம்!**
**வரும்முன் காப்போம்!**
**நலமுடன் வாழ்வோம்!**


*** Download the "NACO AIDS APP"**
*** Toll Free : 1097**

**பாண்டிச்சேரி எய்ட்ஸ் கட்டுபாட்டு சங்கம்**
புதுச்சேரி - 605 001.
தொலை பேசி : 0413 - 2260160, 2337000
மின் அஞ்சல் : pondicherrysacs@gmail.com
**பால்வினை நோய் கட்டுப்பாட்டுத் திட்ட அலுவலகம், ஒதியஞ்சாலை, புதுச்சேரி**

National AIDS Control Organisation
India's Voice against AIDS
Ministry of Health & Family Welfare, Government of India
www.naco.gov.in




# பால்வினை நோய் மற்றும் இனப்பெருக்க வழித் தொற்று நோய்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்

**சுகவாழ்வு மையம்**

PONDICHERRY AIDS CONTROL SOCIETY

## பால்வினை நோய் என்றால் என்ன ?

பால்வினை நோய் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பாதுகாப்பற்ற உடலுறவின் (பெண் பிறப்புறுப்பு, ஆசனவாய் மற்றும் வாய் வழி புணர்ச்சி) மூலம் பரவும் நோய்.

## இனப்பெருக்க வழி தொற்று என்றால் என்ன ?

பிறப்புறுப்பு பகுதிகளில் தொற்று, பாலுறவு வழியாக இல்லாமல் ஏற்படுதல் இவை பிறப்புறுப்பு பகுதி, ஆசனவாய் பகுதி அசுத்தமாக இருந்தால், மாதவிடாய் காலங்களில் சுத்தம் கடைபிடிக்காமல் இருந்தால் இனப்பெருக்க தொற்று வரும்.

## பால்வினை நோய்கள் இருக்கிறதா என்பதை எவ்வாறு அறிந்துக் கொள்ளலாம் ?

பால்வினை நோய் இருக்கிறதா என்பதை கீழ்க்கண்ட அறிகுறிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

### பால்வினை நோயின் அறிகுறிகள்

| வ. எண். | பெண்களுக்கு | ஆண்களுக்கு |
|---|---|---|
| 1. | பிறப்புறுப்பில் புண் (வலியில்லாமல் அல்லது வலியுடன்) | பிறப்புறுப்பில் புண் |
| 2. | சிறுநீர் கழிக்கையில் எரிச்சல், வலி | சிறுநீர் கழிக்கையில் எரிச்சல், வலி |
| 3. | அதிகமான துர்நாற்றத்தோடும், நிறமாற்றத்தோடும் வெள்ளைப்படுதல் | சிறுநீர் துவாரத்தில் சீழ் வடிதல் |
| 4. | அடி வயிற்றில் வலி | வலியுடன் விரைப்பை வீக்கம் |
| 5. | இடுப்பு அரையில் நெறிகட்டுதல் | இடுப்பு அரையில் நெறிகட்டுதல் |

பெண்களுக்கு ஏற்படும் பால்வினை நோய்களில் பெரும்பாலானவை அவர்களின் இனப்பெருக்க உறுப்புகளான கர்ப்பப்பை, கர்ப்பப்பையின் வாய் பகுதி, சினைப்பை ஆகியவற்றைப் பாதிக்கின்றன. அதனால் பால்வினைத் தொற்று ஆண்களுக்கு வெளியே தெரிவது போல பெண்களுக்கு வெளியே தெரிவதில்லை.

## பால்வினை நோய்களை குணப்படுத்த முடியுமா ?

முழுமையாக குணப்படுத்த முடியும்.

ஆரம்ப நிலையிலேயே அறிகுறிகளின் அடிப்படையில் கண்டறிந்து குணப்படுத்தலாம்.

## பால்வினை நோய்களுக்கான மருத்துவம் எங்கு கிடைக்கும்?

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உள்ள "சுக வாழ்வு மையங்களில்" இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது.

சில பால்வினை நோய்களுக்கு பல வகையான நோய் கிருமிகள் காரணமாக இருக்கக்கூடும்.

இதற்காக அறிகுறிகளின் அடிப்படையில் சேர்தொகுப்பு சிகிச்சை (Syndromic Management). அளிக்கப்படுகிறது.

இரத்தம் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் முற்றிலும் இலவசமாக செய்யப்படுகிறது.

## பால்வினை நோய் தொற்றுள்ளவர் மட்டும் மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டால் போதுமா?

பால்வினை நோய் தொற்றுள்ளவர், தான் மட்டும் மருத்துவ சிகிச்சை பெற்றால் போதாது. தன்னுடைய உறவுத் துணையோடு சேர்ந்து ஒரே சமயத்தில் சிகிச்சை பெற வேண்டும். இவ்வாறு சிகிச்சை பெறாவிட்டால், சிகிச்சை பெறாத துணையின் மூலம் பால்வினை நோய் இருவருக்கும் திரும்ப வருவதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு.

**பால்வினைநோய் மற்றும் இனப்பெருக்க வழி நோய்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்**

## பால்வினை நோய்க்கும் எச்.ஐ.வி. / எய்ட்ஸ்க்கும் உள்ள தொடர்பு என்ன ?

பால்வினை தொற்றுக்கு சிகிச்சை எடுக்காமல் இருந்தால் 10 மடங்கு எச்.ஐ.வி. தொற்று வருவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

பால்வினை நோய்க்கான புண் மற்றும் கசிவுகள் வழியாக எச்.ஐ.வி. கிருமி உள்ளே நுழைய வாய்ப்புகள் அதிகரிக்கும்.

## பால்வினை நோய்த் தொற்று தாய்க்கு இருந்தால் பிறக்கப்போகும் குழந்தைக்கும் பாதிப்பு ஏற்படுமா ?



ஆம். கருவிலிருக்கும் போதோ அல்லது குழந்தை பிறக்கும் போதோ, தாயின் பிறப்புப் உறுப்பு பாதையில் உள்ள பால்வினை நோய் தொற்று குழந்தையையும் பாதிக்க வாய்ப்புண்டு.

பால்வினை நோயினால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள் தகுந்த சிகிச்சையை முழுமையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.